அமலாக்கத்துறை - வருமானவரித்துறை - சி.பி.ஐ. மூன்றின் நேர்மைத்தன்மை சந்தேகத்துக்குரியது!

குற்றச்சாட்டினாலேயே ஒருவரை கைது செய்வதென்பது நியாயமானதல்ல!

"சன் நியூஸ்" தொலைக்காட்சியில் 'கேள்விக் களம்' நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளர் ஆர்.ரங்கராஜ் ஆணித்தரமான விவாதம்!

சென்னை, ஜூலை 16

அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, சி.பி.ஐ. மூன்றின் நேர்மைத்தன்மை சந்தேகத்துக்குரியவை என்றும், குற்றச்சாட்டு கூறப்பட்ட உடனேயே ஒருவரை கைது செய்வதென்பது நியாய மானதல்ல என்றும், "சன் நியூஸ்" தொலைக்காட்சி 'கேள்விக் களம்' நிகழ்ச்சி விவாதத்தின் போது, மூத்த பத்திரிகையாளர் ஆர்.ரங்கராஜ் ஆணித்தர மான ஆதாரங்களை எடுத்து வைத்தார்.

"சன் நியூஸ்" தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் (14.7.2023) "கேள்விக் களம்" பகுதியில், "செந்தில்பாலாஜிக்கு காத்திருக்கும் 2 முக்கிய வழிகள், அமலாக்கத் துறை காவலை ஏற்றால் அடுத்தடுத்து என்ன நடக்கும்?" என்ற தலைப்பில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற விவாத நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளர் ஆர்.ரங்கராஜ் பேசியதாவது:-

நெறியாளர் மு.குணசேகரன்: அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டது சட்டவிரோதமான ஒன்றா, அவரை காவலில் எடுத்து விசாரிப்பதற்கு அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இருக்கிறதா, என்கிற பல சட்ட நுணுக்கமான அம்சங்களை முன்வைத்து, இரண்டு நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பை வழங்கி இருக்கிற நிலையில், மூன்றாவது நீதிபதியிடம் இந்த வழக்கு சென்றது.

அதில் மூன்றாவது நீதிபதி கொடுத்த தீர்ப்பில் பரத சக்கரவர்த்தி கொடுத்த தீர்ப்பை தாம் ஆமோதிப்பதாக அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார். அதில் மேலும் சில அம்சங்கள் இருக்கின்றன. கைது சட்டப்படியான ஒன்றுதான், ஆட்கொணர்வு மனு செல்லத்தக்கதல்ல, கைது என்பது நடக்கும்போது காவலில் எடுத்து விசாரிப்பதற்கும், அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இருக்கிறது என்றும் அவர் தன்னுடைய தீர்ப்பில் சொல்லி இருக்கிறார்.

இரண்டு நீதிபதிகள் மாறுபட்ட கருத்தை சொன்ன நிலையில் மூன்றாவது நீதிபதி கருத்து பெரும்பான்மை கருத்தாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் தலைமை நீதிபதிக்கு அந்த வழக்கு அனுப்பப்பட்டு அவரை எத்தனை நாள் காவலில் எடுக்கலாம், எப்போதிலிருந்து எடுக்கலாம் என்கின்ற அம்சங்கள் விவாதத்திற்கு வரவிருக்கின்றன. இந்தப் பிரச்சினை ஒரு நீண்ட சட்டப் பிரச்சினையாக இருக்கப் போகிறது. இதற்குப் பிறகு செந்தில் பாலாஜி தரப்பில் உச்சநீதி மன்றத்திற்குச் சென்று முறையிடப் போகிறார்களா அல்லது காவல் என்பதை ஏற்றுக் கொண்டு, அமலாக்கப்பிரிவினுடைய விசாரணையை ஏற்றுக் கொண்ட பிறகு ஜாமீன் கோரி நீதி மன்றத்தை அணுகப்போகிறார்களா? இவற்றில் சொல்லக் கூடிய செய்தி என்ன, ஏற்படுத்தக் கூடிய தாக்கம் என்ன என்கின்ற அம்சங்களை நாம் விவாதிக்கப்போகிறோம்.

பத்திரிகையாளர் ரங்கராஜ் அவர்கள் பார்வைக்கு, ரங்கராஜ் இந்த வழக்கை, நீங்கள் உன்னிப்பாக பார்த்திருந்திருப்பீர்கள். இரண்டு நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு தந்த பிறகு, மூன்றாவது நீதிபதி ஒரு தீர்ப்பு சொன்னால் அத்தோடு அந்த வழக்கு முடிந்துவிடும்.

ஆனால், அவர் இதில் கருத்தைச் சொல்லிவிட்டு, மீண்டும் தலைமை நீதிபதிக்கே அவர் அனுப்பி, பழைய நடைமுறை 70-80களில் இருந்த நடைமுறைக்கு நீதிபதி சென்றிருக்கிறார். இன்றைய நீதிபதி அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?

பத்திரிகையாளர் ஆர்.ரங்கராஜ்: நேரடியாக இந்த வழக்கின் தன்மைக்குள் நான் போகவில்லை. ஏன் என்றால் வெளித் தோற்றத்துக்கு சட்டம் சம்பந்தமான சில விஷயங்கள் நீதிபதிகளின் அப்சர்வேஷன்ஸ் நீதிமன்றங்களில் வெளிவந்திருக்கின்றன. சில சொற்கள் டிஸ்டர்பிங் ஆக இருக்கு. ஒரு ஜனநாயக நாட்டில், நீதிமன்றங்கள் செயல்படும் போது, இதில் தனி மனித சுதந்திரம் இன்டிவிஜீவல் ப்ரீடம் பற்றி நாம் சற்று கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனென்றால், நாம் படித்த வரை, சட்டம் தெரிந்த வரை, Man is innocent until proven Guilty அதாவது ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவர் என்பது வேறு, குற்றம் நிரூபித்து தண்டனை அனுபவிக்க வேண்டியவர், சிறைக்கு அனுப்பப்படுகிறார் என்பது வேறு. அப்படி குற்றம் சாட்டப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை வரும் வரை ஒருவர் குற்றம் சாட் டப்பட்டவர், நிரபராதி என்பது தான் சட்டம் நமக்கு கொடுத்த பாடம்.

நெறியாளர் மு.குணசேகரன்: குற்றவியல் நடைமுறை சட்டத்தில் ஒருவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் குற்றமற்றவர், அப்பாவி, நிரபராதி என்று தான் கருதப்பட வேண்டும். யார் வழக்குத் தொடுக்கிறார்களோ, ஒரு போலீஸ் ஒருவரை ஒரு வழக்கில் கைது செய்கிறார்கள். சி.பி.ஐ. ஒருத்தரை ஒரு வழக்கில் கைது செய்கிறார்கள். அப்படி கைது செய்கின்ற விசாரணை அதிகாரிகள் தான், இன்னார் இந்தக் குற்றத்தை செய்திருக்கிறார் என்று நிரூபிக்க வேண்டும். ஆனால், இ.டி.க்கு கொடுத்திருக்க கூடிய வரம்பற்ற அதிகாரத்தில், இவர் இந்தக் குற்றத்தை செய்திருக்கிறார் என்று ஒருத்தரை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் கிடையாது.

மாறாக, யார் குற்றம் சாட்டப்பட்டாரோ, அந்த நபர், தான் நிரபராதி, எனக்கும் இந்தக் குற்றத்திற்கும் தொடர்பில்லை என்று தன் innocence-ஐ நிரூபிக்க வேண்டியது வந்து விடுகிறது.

இது ஒரு தடா, பொடா போன்ற ஆள் தூக்கி சட்டங்களில்தான் இந்த மாதிரியான அம்சங்கள் இருந்தது. இப்போது இ.டி. கையாளக்கூடிய வழக்குகளிலும், அந்த அதிகாரத்தைக் கொடுத்து இருப்பதை பார்க்கிறோம். இந்தச் சூழ்நிலையில் இந்தத் தீர்ப்பை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

பத்திரிகையாளர் ஆர்.ரங்கராஜ்: இந்தச் சூழ்நிலையில், நீதிபதியின் ஒரு கருத்து - நீதிமன்றத்திற்கு நீங்கள் வந்து, நிரபராதி என்று Accused வந்து நிரபராதி என்று நிரூபியுங்கள் என்று சொல்கின்ற கருத்து எனக்கு உறுத்துகிறது. சட்டம் என்ன சொல்கிறது என்றால் Man is innocent until proven Guilty, இப்போது இ.டி. சொல்வதும் இறுதித் தீர்ப்பல்ல, என்போர்ஸ்மெண்ட் டைரக்டரேட் ஒருவர் மீது வழக்குத் தொடருகிறார்கள். இப்போது இந்த மூன்றாவது நீதிபதி கூறியது கூட தீர்ப்பு கிடையாது. காவலில் வைக்க வேண்டுமா என்பது குறித்து அவர் சொல்கிறார். இது கூட தீர்ப்பல்ல, ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும் போது, நீதிமன்றங்களில் நடைபெறுகின்ற ஒரு வழக்கு. அவர்களும் விசாரிக்கிறார்கள். அவர்கள் விசாரிக்கும் போது நான் வரவில்லை என்று கூட அமைச்சர் சொல்லவில்லை. அவரும் விசாரணைக்கு தன்னை உட்படுத்திக் கொள்கிறார். ஆகவே, கைது அவசியமா? என்பதுதான் முக்கியமான கேள்வி. ஒரு விசாரணை நடைபெறுகின்றது. வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிறது.

அதுவும் 2014-இல் இருந்து நடைபெறுகின்ற ஒரு வழக்கு. எந்தத் தனி நபர் மீதும் நான் சொல்கிறேன். அமைச்சர் செந்தில் பாலாஜிக்காக நான் இதை சொல்லவில்லை. ஒரு பத்திரிகையாளரை கைது செய்தால் கூட, ஒரு சாதாரண மனிதரைக் கைது செய்தால் கூட , Arrest should be last Resort கைது என்பது இந்த அத்தனை வழக்குகளை பைல் செய்வதும், விசாரிப்பதும், ஆதாரங்களை சேகரிப்பதும், கோர்ட்டில் இரு தரப்பும் வாதாடி, இறுதியில் தீர்ப்பு வரும். அதற்குப் பிறகு தான் கைது என்று கோர்ட் தீர்மானித்து, இவர் குற்றம் செய்தவர், அந்தச் சமயத்தில் தான் கைதே நாட்டில் நடைபெற வேண்டும் என்பது என்னுடைய ஆணித்தரமான கருத்து.

ஏற்கனவே இதே மாதிரி நாம் பார்த்திருக்கிறோம். அரசியல் கேஸ் என்று எடுத்துக் கொண்டால் கூட போபர்ஸ் கேஸ், 2ஜி கேஸிலும் விடுதலை ஆகியிருக்கிறார்கள். வழக்கு நடைபெறும் போதே சிறையில் அடைப்பது, இது வழக்கின் தன்மைக்கே எதிரானது. என்போர்ஸ்மெண்ட் டைரக்டரேட்டோ, இன்கம்டாஸ்க்சோ, சி.பி.ஐ.யோ வழக்குத் தொடுக்கிறார்கள். அவர்களே, வழக்கு நடக்கும் போது எப்படி தீர்ப்பு சொல்வார்கள்? இன்னார் குற்றவாளி ஓ.கே., குற்றம்செய்தவர் ஓ.கே. தண்டனை பெற்றுவிட்டார்களா, ஏன் கைது செய்யவேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை.

இது நாட்டில் உள்ள பல இலட்சம் நபர்கள் சார்பாக நான் சொல்கிறேன். செந்தில் பாலாஜிக்காக நான் வாதாடுவதாக நீங்கள் சொல்ல வேண்டாம். நாட்டில் பல லட்சம் பேர் வெறும் வழக்குப் போடப்பட்டு வருடக்கணக்கில் சிறையில் Under Terial Prisioners வாடுகிறார்கள். தீர்ப்பு கொடுத்தால் கூட குறைவாகத்தான் இருக்கும். ஆறுமாத சிறை, ஒரு வருடம் சிறை என்றுதான் இருக்கும்.

ஆனால் நான்கு வருடம், ஐந்து வருடம், பத்து வருடம் சிறையில் இருக்கிறார்கள். இது கோர்ட்டில் நடைபெறுகின்ற ஒரு கேஸ். அதுவும் ஆறு ஆண்டுகள், ஏழு ஆண்டுகள் நடைபெறுகின்ற ஒரு வழக்கு. இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கு. நீதிமன்றம் தீர்ப்பு கொடுக்கட்டுமே. யார் ஆட்சேபனையும் சொல்லவில்லையே, வழக்கு நடக்கட்டும், அமைச்சர் இருக்கிறார், இ.டி. விசாரிக்கிறது. இறுதித் தீர்ப்பை கோர்ட் சொல்லட்டுமே . தனி மனிதச் சுதந்திரம் பற்றி நீதிமன்றம் என்ன சொல்கிறது என்பது தான் என் கவலை.

நெறியாளர் மு.குணசேகரன்: ரங்கராஜ் நீங்கள் சொல்வது மிக முக்கியமானது, Personal Liberty அடிப்படையில் இந்தக் கைதே தேவையற்றது என்று சொல்கிறீர்கள்.

பத்திரிகையாளர் ஆர்.ரங்கராஜ்: ஆம், இந்தக் கைதே தேவையற்றது. கைது செய்வதற்கு உரிமை இருக்கா இல்லையா? என்பது வேறு. உரிமை இருக்கிறது என்றால் நாட்டில் எவ்வளவு பேரையும் கைது செய்யலாமா? இந்த மாதிரி போக்கை கைவிட வேண்டும். முக்கியமான விஷயம் ஒன்றைச் சொல்கிறேன். என்போர்ஸ்மெண்ட் டைரக்டரேட்டினுடைய டைரக்டர் அவரே இல்லீகல் என்று சுப்ரீம் கோர்ட் சொல்லி, ஆடரே இரண்டு நாளுக்கு முன்பு வந்திருக்கின்றது.

இந்த டைரக்டர், 2021, 2022 இரண்டு ஆண்டுகளும் பதவி நீட்டிப்பை முறைகேடாக அரசு வழங்கி இருக்கிறது என்பது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு. அதுவும் அவர் வந்து உடனடியாக கூட அவர் வேலையை காலி செய்யவில்லை.

இவ்வாறு நீங்கள் காலி செய்கிறீர்கள். ஆனால் ஜூலை 31 வரை நீங்கள் இருக்கலாம். ஏன், இந்த வழக்குளை எல்லாம் நான் பார்க்கிறேன் என்று சொல்லி, இப்போது என்போர்ஸ்மெண்ட்டின் தலைமையின் அப்பாயிண்மெண்ட்டே இல்லீகல் என்கிற போது, இப்படி முறைகேடாக செயல்படும் போது இவர்களின் வாதத்தை எப்படி நாடு ஏற்றுக் கொள்ளும்?

இன்கம்டாக்ஸ் டிப்பார்ண்மெண்டை எடுத்துக் கொள்ளுங்கள். இன்கம்டேக்ஸ் டிப்பார்ட்மெண்ட், ஜெயலலிதாவின் வீடு, போயஸ் கார்டன் இல்லம். இந்த வீட்டை, மாநில அரசு அதனை எடுத்துக் கொள்வதாக ஒரு உத்தரவை வெளியிடுகிறது. அதையொட்டி சர்ச்சை நடைபெறும் போது தீபா, தீபக் அவர்கள் உறவினர்கள். இது எங்களுக்கு சொந்தம் என்று சொல்லும் போது, இல்லை இதனை எடுத்துக் கொள்ள கூடாது என்றார்கள்.

ஆனால் திடீரென்று மூன்றாவது நபர் கோர்ட்டுக்கு வருகிறார். அந்த மூன்றாவது நபர் யார்? இன்கம்டாக்ஸ் டிப்பார்ண்மெண்ட், தீபா, தீபக்கும் சொந்தமில்லை. அரசும் அதனை ஏற்றுக் கொள்ள உரிமை கிடையாது. என்ன காரணம், இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட், போயஸ் கார்டன் இல்லத்தை - ஜெயலலிதா இல்லத்தை அட்டாச் செய்து பல வருடம் ஆகிவிட்டது. அவர் இன்கம்டாக்ஸ் டிப்பார்ட்மெ ண்ட்டைப் பொறுத்தவரை அவர் குற்றவாளி, அவர் வருமானவரி செலுத்தவில்லை. பல ஆண்டுகளாக முறைகேடு நடந்திருக்கிறது, அதனால் அவர் வீட்டை அட்டாச் செய்திருக்கிறோம்.

இந்தத் தகவலை எப்போது வந்து சொல்கிறார்கள், பல ஆண்டுகளுக்குப் பிறகு . நீதிமன்ற வழக்கிற்குப் பிறகு. இன்கம்டேக்ஸ் அருமையான டிப்பார்ட்மெண்ட், அந்த அட்டாச் செய்த வீடு, இன்கம்டேக்ஸ் டிப்பார்ட்மெண்ட்டைப் பாருங்கள் அருமையான டிப்பார்ட்மெண்ட். அட்டாச் செய்த வீட்டில், வேறு ஒரு ஒருவர் வீடு அட்டாச் செய்யப்பட்டால் அந்த வீட்டின் உரிமையாளர் அந்த வீட்டில் தொடர்ந்து இருக்கஅனுமதிப் பார்களா? அட்டாச் செய்யப்பட்ட வீட்டில், ஜெயலலிதா அவர்கள் பல ஆண்டுகள் வாழ்ந்தார். தீபா, தீபக் உரிமை கோரும் போது வருமான வரித்துறை திடீரென்று வந்து இது அட்டாச் செய்யப்பட்டது என்று சொல்லி இருக்கிறார்கள்.

நெறியாளர் மு.குணசேகரன்: ஒரு அமைச்சருடைய கைது களங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. மக்கள் இதனை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், மக்கள் இதனை ரசிக்கவில்லை. அவருக்காக வக்காலத்து வாங்குவதை மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று எதிர்முகாமில் வைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. முகாமில் வைக்கின்ற வாதம், அரசியலுக்காக ஒன்றிய அரசு இதுபோன்ற விசாரணை அமைப்புகளை பயன்படுத்துகிறார்கள் , எதிர்க்கட்சி என்பதினால் பழி வாங்குறாங்க, ஒடுக்க பார்க்குறாங்க இதற்கு அஞ்ச மாட்டோம், வேண்டும் என்றே அரசியல் செய்கின்ற போது அதனை எதிர்த்து நிற்க வேண்டியதும், அவரை பாதுகாக்க வேண்டியதற்கான அவசியம் எழுகிறது என்று காரை செல்வராஜ் (ம.தி.மு.க.) போன்றவர்கள் சொல்கிறார். உங்களுடைய கருத்து என்ன? .

பத்திரிகையாளர் ஆர்.ரங்கராஜ்: நடவடிக்கை எடுத்தது ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது. செந்தில் பாலாஜியை என்போர்ஸ்மெண்ட் டைரக்ரேட் கைது செய்திருந்தால் இப்போது அந்த வழக்கை தொடர்ந்து கன்டின்யூ இன்வெஸ்டிகேசன் செய்யலாம். 2014 இல் ஜெயலலிதா முதலமைச்சராக இருக்கும் போது செந்தில் பாலாஜியை கைது செய்யவில்லை. இன்வெஸ்டிகேசனில் கைது அவசியம் என்று சொல்பவர்கள், 2014 இல் ஏன் கைது செய்யவில்லை. அப்படி ஒரு கேள்வி எழுகிறது. அதற்குள் நான் போகவில்லை.

நான் முக்கியமான கேள்விக்கு வருகிறேன். தீர்ப்பில் Disturbing aspect அதில் ஒன்று. கூட்டாட்சி தத்துவத்திற்கே ஒரு பெரிய சோதனை, ஒன்றிய அரசு சார்ந்த ஒரு அமைச்சரை மாநில அரசு கைது செய்யக் கூடாது. அப்படி என்று சொல்லிட்டு, பிரதமராக வாஜ் பாய் இருந்த போது முரசொலி மாறன் அவர்களையும், டி.ஆர். பாலு அவர்களையும் ஜெயலலிதா அரசு கைது செய்த போது, மத்திய அரசு, மாநில அரசு மத்திய அமைச்சர்களை கைது செய்யக் கூடாது அது கூட்டாட்சி தத்துவத்துக் களங்கம் என்று ஒரு கடிதம் அனுப்பியது. அதனை வைத்துத் தான் ஜெயலலிதா அரசு அவர்களை விடுதலை செய்தார்கள்.

ஒரு மாநில அமைச்சரை, மத்திய அரசு கைது செய்யக் கூடாது இது தான் Federalism கூட்டாட்சி. அப்படி கைது செய்ய அனுமதித்தால் நாடு சுடுகாடாகிவிடும். 14 மாநிலங்களில் இன்றைக்கு பா.ஜ.க. ஆட்சியில் இல்லை. நாளைக்கு ஒரு வாதத்திற்கு அமித்ஷாவோ ஒரு மத்திய அமைச்சரோ ஒரு மாநிலத்திற்கு செல்கிறார் பஞ்சாப்போ, தமிழ் நாடோ என்று. தமிழ்நாடு என்று கூட எடுத்துக் கொள்ளலாம்.

சட்டம் ஒழுங்கு நம் கையில் இருக்கு, லா அண்டு ஆர்டர்ன்னு சொல்லி மத்திய அமைச்சரை மாநில அரசு கைது செய்தால் ஏற்றுக் கொள்வார்களா, சட்டம் கடமையைச் செய்கிறது, கடமையைச் செய்யட்டும் என்று பாகி சொல்கிறார். மற்றவர்கள் சொல்கிறார்கள். சட்டம் தன் கடமையைச் செய்யட்டுமே, நீதிமன்றத்தில் குற்றமற்றவர் நிரூபிக்கட்டுமே, கைது செய்யப்பட்ட வரை பூவிருந்தவல்லி சிறையில் 4 மாதம் வைத்தால் நாடு தாங்குமா, இதையே எந்த மத்திய அமைச்சரும் எந்த மாநிலத்திற்குச் சென்றாலும் அவர்களை கைது செய்யலாமா? சட்டம் ஒழுங்கு அவர்கள் கையில் இருக்கு, அவர்கள் வழக்கு போட்டால் நாடு தாங்குமா? நாடு என்ன ஆவது? அதனால் தான் சொல்கிறேன் மாநில அமைச்சர்களை மத்திய அரசு கைது செய்யக் கூடாது.

சிஷோடியா, கைது செய்வது மட்டுமல்ல நான்கு மாதமாக அவருக்கு ஜாமீன் கொடுக்காமல் வைத்து இருக்கிறார்கள். அப்படி என்ன அவர் விசாரணையை மாத்திடப் போறார். இதே நான் சொல்கிறேன் செந்தில் பாலாஜியை கைது செய்வதோடு முடியாது. என்போர்ஸ்மெண்ட் டிபார்ட்மெண்ட் அவர் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு முக்கிய நீதிபதி கூறியது என்னவென்றால், ஒரு குற்றவாளி குற்றம்சாட்டப்படும் போது அந்தக் குற்றம் நான் செய்யவில்லை என்று அவர் சொல்வதற்கு முழு அதிகாரம் சட்டத்தில் உள்ளது. போலீசிடமும் சொல்லலாம், நீதிமன்றத்தில் அவர் வரும் போது, அப்போது தான் நிரபராதி என்று சொல்கின்ற உரிமை அவருக்கு இருக்கிறது.

என்போர்ஸ்மெண்ட் டைரக்டர் என்ன சொல்கிறார் என்றால், அவர் ஒத்துழைக்கவில்லை என்றால், அவர்களைப் பொறுத்தவரை என்ன அர்த்தம் என்றால் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. நான் வைத்த ஆதாரத்தை வைத்து குற்றத்தை அவர் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால், ஒத்துழைக்கவில்லை என்று சொல்லி நீதிமன்றங்களில் ஒரு (Bogus) போகசான வாதத்தை வைத்துவிட்டு தொடர்ந்து இன்னும் 15 நாள் காவல், இன்னும் மூன்று மாதம் காவல் , நான்கு மாதம் காவல் என்று சொல்லிக் கொண்டு போகிறார்களே என்ன காரணம், இவர்களை வெளியே விட்டால், இவர்கள் விசாரணையை மாத்திடுவாங்க, சாட்சிகளை களைத்துவிடுவாங்க என்று சொல்கிறார்கள். நான்கு மாதமாக ஒரு துணை முதல்வர் சிறையில் இருக்கிறார். இன்னொரு மினிஸ்டரும் ஆறுமாதமாக இருக்கிறார். பல பேர் அதே மாதிரி இருப்பாங்க.

ஆனால், ஒரு விசாரணை நடக்கும் போது அமைச்சர் மீது குற்றச்சாட்டு வைத்து நீக்கி இருக்கிறார்களே அந்தத் துறைக்கான அமைச்சர்கள், அமித்ஷா ஆகட்டும், அவர் மத்தியில் இருந்து அவர் சாட்சியை மாற்ற மாட்டாரா, அவர் கேஸை மாற்ற முடியாதா, பொய் கேஸ் போட்டு சாதிக்கலாம் என்று சொல்லலாமா, அப்படி என்றால் அந்த அமைச்சர் பதவியில் இருக்கக்கூடாது என்பதை கோர்ட் ஏற்றுக் கொள்ளுமா, செந்தில் பாலாஜி பொறுப்பில் இருக்க வேண்டாம், சம்பந்தப்பட்ட உள்துறை அமைச்சரும் அமித்ஷாவும் பொறுப்பில் இருக்க வேண்டாம்.

அப்போது நியாயமாக நேர்மையாக விசாரணை நடக்கட்டும், இவர்கள் மட்டும் தான் விசாரணையை மாற்றக் கூடியவர்களா, மத்திய அரசு ஆட்சியில் இருப்பவர்கள் சாட்சிகளை மாற்ற மாட்டார்களா, வேறு வழக்குகளை உருவாக்க மாட்டார்களா , நாம் பார்க்கிறோமே, இதே கேள்வியைக் கேட்கிறோம், நள்ளிரவில் சி.பி.ஐ. டைரக்டரை மோடி அரசு ரிமூவ் செய்கிறது. அதற்கு காரணம், அது இல்லீகல் என்று சுப்ரீம் கோர்ட்டே சொல்லியது. அவரை நீக்கும் போது அதில் மற்றொரு வரை போஸ்ட் செய்றாங்க, அவர் மீதும் குற்றச் சாட்டுகள் இருக்கிறது.

இப்படிப்பட்ட சி.பி.ஐ. தலைமை நிறுவனம் இருக்கு. இப்படிப்பட்ட சி.பி.ஐ., என்போர்ஸ்மெண்ட் டிபார்ட்மெண்ட், இன்கம்டாக்ஸ் இந்த மூன்று பேருக்கான எந்த அழகில், எந்த இலட்சணத்தில் இவர்கள் செயல்படுகிறார்கள் என்று சொல்கிறேன்,

இவர்கள் சொல்கின்ற வாதத்தை நீதிமன்றங்கள் அப்படியே ஏற்றுக் கொண்டு, கைது செய்வதற்கும் ஓ.கே. சொல்வதும், தொடர்ந்து காவலில் வைப்பதற்கும் ஓ.கே.சொல்வதற்கும், இது தான் நான் சொல்வது , என்னைப் பொறுத்தவரை ரொம்ப ரொம்ப Disturbing aspect, எந்த அளவிற்கு இதனை எடுத்துக் கிட்டுப் போவீர்கள். டெப்டி சீப் மினிஸ்டர், நான்கு மாதமாக ஜெயிலில் வைத்து இருக்காங்க. என்ன காரணம், கேட்டால் Non Cooperation ஒத்துழைக்கவில்லை என்கிறார்கள். நான் கோ ஆபரசேன், அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் என்ன காரணம் தெரியுமா, அவர்கள் கூறுகின்ற குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. இதை தான் அவர்கள் செய்கின்ற வாதம், இதையே தான் அவர்கள் செந்தில் பாலாஜி வழக்கிலும் செய்வார்கள்.

விசாரணை செய்யட்டும், தைரியமாக பேஸ் செய்யட்டும், என்று சொல்கின்ற பாகி அவர்களை அரஸ்ட் செய்து பூவிருந்தமல்லி சிறையில் நான்கு மாதம் வைத்து விட்டு, அவர் ஒத்துழைக்கவில்லை என்றால் அதனை பாகி ஏற்றுக் கொள்வாரா, இதே சீனிவாசன் ஏற்றுக் கொள்வாரா, கொடநாடு வழக்கில் எடப்பாடி பழனிச்சாமியை வழக்கு இருக்கின்ற காரணத்தால், நான்கு மாதம் ஜெயிலில் வைக்கலாமா, விஜயபாஸ்கரை மூன்று வருடம் ஜெயிலில் வைக்கலாமா, வழக்கு இருப்பதினால். இது அவர்களை பாதிக்கும் போது அவர்கள் சொல்வார்கள். அவர்களிடத்தில் ரெய்டு நடந்தது. ரெய்டு எப்போது நடைபெற்றது. மெர்ஜர் செய்தபோது ரெய்டு நடைபெற்றது. ஓ.பி.எஸ், இ.பி.எஸ். மெர்ஜரை ப்ரபோஸ் செய்த போது ரெய்டு நடந்தது. மூன்றே நாளில் விட்டு விட்டாங்க மெர்ஜரை, நீங்களும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாளைக்கு பா.ஜ.க. கட்சியில் நீங்கள் சேரவில்லை என்றால் அங்கேயும் இரண்டு ரைய்டு நடக்கும், வேறு சில காரணங்கள், அதற்கு நீங்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் ரெய்டு நடக்கும் நீங்கள் வந்து ஓ.பி.எஸையும், டி.டி.வி. தினகரனையும் உங்கள் கூட்டணியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றால் ரெய்டு நடக்கும். அப்போது வந்து கத்துவீர்கள். அப்போது எங்களிடம் வந்து பத்திரிகையாளர்களே நீங்கள் நியாயம் வழங்குங்கள் என்று கேட்பீர்கள். சேனல்.சேனலா நீங்களும் வந்து சுத்துவீர்கள். இந்தக் காட்சிகளை நாங்கள் பார்க்கப்போறோம்.

ஆகவே பொதுவான ஒரு தெளிவான ஒரு பார்வை இருக்க வேண்டும். இதில் சட்டம் ஒழுங்கு தன் கடமையைச் செய்யட்டும் என்ற போர்வையில் தீர்ப்பு வருவதற்கு முன்னால் இது போன்ற நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும். யாரும் எங்கேயும் போய்விடப் போவதில்லை, கைது செய்தால் தான் கேஸ் என்று நினைத்தால் நாட்டில் எல்லோரும் சிறையில் இருக்க வேண்டியதுதான். அப்போது திறந்த ஜெயில், புழல் ஓபன் ஜெயில் போட வேண்டியதுதான். ஐந்து கோடி மக்களுக்கும் ஓபன் ஜெயிலில் போட்டு எல்லோரையும் உள்ளே வைக்க வேண்டியதுதான். ஒரு வழக்கு போடுவதினாலே ஒருத்தர் Guilty கில்டி என்ற இந்த வாதம் துளி கூட ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல, நீதிமன்றங்களும், நீதி பரிபாலனமும் சரியாகச் செயல்பட வேண்டும்.

தற்போது மகாராஷ்டிராவில் டிஸ்குவாலிபிகேசன் கேஸ் வரும் போது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டிஸ்குவாலி பிகேசன் வழக்கில் சிவஷேனா சிண்டே ஆட்கள் குறித்து அப்போதே உச்சநீதிமன்றம் தீர்ப்பு சொல்லி இருந்தால், இப்போது வந்து சிண்டே கவர்ண்மெண்ட் இல்லீகல் என்று சொல்கின்ற உச்சநீதிமன்றம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களை டிஸ்குவாலிபிகேசன் செய்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்குமா, எப்போது நியாயம் வழங்க வேண்டுமோ அப்போது உச்சநீதிமன்றம் நியாயம் வழங்கி இருக்க வேண்டும். அப்போது நியாயம் வழங்க தவறியதால், இரண்டு வருடங்கள் கழித்து கவர்ண்மெண்ட் இல்லீகல், அவர் ரிசைன் செய்துவிட்டார் என்று சொல்கிறது.

இது போல சி.பி.ஐ. டைரக்டர் நீக்கியது தவறு. ஆனால் புதிய வழக்கு எதையும் போடக் கூடாது என்று உச்சநீதிமன்றம் சொல்கிறது. இதையெல்லாம் எப்படி ஏற்றுக் கொள்வது?

அப்பாவு வழக்கில், இராதாபுரம் வழக்கில்.உயர்நீதிமன்றம் கவுண்டிங் செய்யலாம் என்றது. ஆனால் ரிசல்டை வெளியிடக் கூடாதாம். இது உச்சநீதிமன்றத்தின் ஆர்டர். ஐகோர்ட்டை அவங்க நம்பவில்லை. ஐகோர்ட் கவுண்டிங் செய்யலாம், ஆனால் ரிசல்ட் வெளியிடக்கூடாது என்று சொல்லி அந்தத் தேர்தலும் முடிந்து போச்சு, வேறு தேர்தலில் அப்பாவும் ஜெயித்து வந்து, இன்றைக்கு சபாநாயகராக இருக்கிறார்.

நாட்டில் நீதி பரிபாலனம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பது நான் சொன்ன மூன்று டிஸ்டர்பிங் ஆஸ்பெக்ட் இதுதான். ஒத்துழைக்கவில்லை என்று சொல்லி தொடர்ந்து கைது செய்து காவலில் எடுத்து விசாரிக்க அமலாக்கத்துறை தொடர்ந்து கேட்கிறது. இது ஒரு டேஞ்சரஸ் சிச்சுவேஷன். ஆபத்தானது. நீதிமன்றங்கள் நேரத்திற்கு தலையிட வேண்டும். இல்லீகல் என்று தெரிகின்ற போது நியாயத்தின் பக்கம் நின்று பாதிக்கப்பட்டவர் பக்கம் நின்று நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் ஆர். ரங்கராஜ் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கீழ் புதுப்பட்டு தரை பாலத்தை உயர்மட்ட பாலமாக கட்டுவதற்கான பணியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன் உள்ளனர்.

என்.சதாசிவம் தலைமையில்

வேதாரண்யம் கிழக்கு ஒன்றியத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

என்.கௌதமன் - மதுரை